(*b*) if so, whether the same has not affected the efficiency of the Corporation ?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள் மாற்றம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களும் நிர்வாக இயக்குநர்களும் கடந்த ஆறு ஆண்டுகளில், அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டனரா ?

(இ) ஆமெனில், இம்மாற்றம் காரணமாக இக்கழகத்தின் திறமை பாதிக்கப்படவில்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிர்வாகத்தின் வசதியைப் பொறுத்து, நிறுவனத்தின் செயல்திறனைப் பாதிக்காத முறையில் அலுவலர்களின் மாற்றங்கள் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் யார் யார் தலைவர்களாகவும் ,நிர்வாக இயக்குநர்களாகவும் இருக்கின்றார்கள், அவர்கள் எவ்வளவு காலம் தலைவர்களாகவும், நிர்வாக இயக்குநர்களாகவும் இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே கணக்குப் போட்டு பார்த்துச் சொல்வதாக இருந்தால், கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சுமார் 1968-லிருந்து 10 பேர்கள் இருந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஞக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

Mr. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1973 (L.A. Bill No. 24 of 1972) as passed by the Legislative Assembly, and signed by him, for the concurrence of the Council.